**செய்தி வெளியீடு எண்:013** **நாள்: 07.01.2020**

## <u>செய்தி வெளியீடு</u>

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைக்கிணங்க, தேசிய வாக்காளர் தினம், 2020 சென்னை கலைவாணர் அரங்கத்தில் 25.01.2020 அன்று கொண்டாடப்பட உள்ளது. தேர்தல் குறித்த அறிவை இளைஞர்களுக்கும், எதிர்கால வாக்காளர்களுக்கும் கொண்டு சேர்க்கும் வகையில் இந்தியத் தேர்தல் ஆணையம், தேசிய வாக்காளர் தினம், 2020க்கான கருப்பொருளாக 'வலிமையான மக்களாட்சிக்குத் தேர்தல் கல்வியறிவு' என அறிவித்துள்ளது. இதன் ஒரு பகுதியாக பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு வினாடி வினா நிகழ்ச்சி, சென்னை கலைவாணர் அரங்கத்தில் 23.01.2020 அன்று பிற்பகல் 12 மணி முதல் 05.30 மணி வரை நடைபெற உள்ளது.

ஒன்பதாம் வகுப்பு முதல் கல்லூரி இளநிலை பயிலும் மாணவர்கள் வரை இந்தப் போட்டியில் கலந்து கொள்ளலாம். ஆர்வமுள்ள மாணவர்கள் தங்களின் பெயர், பயிலும் கல்வி நிறுவனத்தின் பெயர், பயிலும் வகுப்பு மற்றும் கைபேசி எண் ஆகிய தகவல்களை goalquiz@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியில் பதிவு செய்து கொள்ளலாம். இந்நிகழ்வில், 200 அணிகளும், அணி ஒன்றுக்கு இரண்டு உறுப்பினர்களைக் கொண்டதாகவும், முதலில் பதிவு செய்யும் 200 அணிகள் மட்டுமே போட்டியில் பங்கேற்க இயலும். இது குறித்து எழும் ஐயங்களுக்கு 9840927442 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளலாம். 20.01.2020 அன்று பதிவு செய்வதற்கான கால அளவு நிறைவுறுவதுடன், மாணவர்கள் தங்களின் பெயர்களை மேற்கண்ட மின்னஞ்சல் முகவரியில் மட்டுமே பதிவு செய்ய இயலும், போட்டி நடைபெறும் இடத்தில் நேரடியாக பதிவு செய்ய இயலாது.

தேர்தல் மற்றும் பொது அறிவு (முறையே 50%) சார்ந்து வினாடி வினா போட்டிகள் நடைபெறும். ஒவ்வொரு கல்வி நிறுவனமும் பல அணிகளை அனுப்பலாம். ஆனால், ஓர் அணி 2 மாணவர்களைக் கொண்டதாக மட்டுமே இருக்க வேண்டும். போட்டி குறித்த விவரங்கள் பின்வருமாறு:–

| | |
|---|---|
| போட்டி நடைபெறும் இடம் | கலைவாணர் அரங்கம்,<br>ஓமந்தூரார் அரசு வளாகம்,<br>சென்னை–2. |
| நாள் மற்றும் நேரம் | 23.01.2020,<br>பிற்பகல் 12 முதல் 05.30 மணி வரை |
| நுழைவுக் கட்டணம் | அனுமதி இலவசம் |
| வருகைப் பதிவு நேரம் | பிற்பகல் 12.00 முதல் 12.30 மணி வரை |
| பரிசுத் தொகை | முதல் பரிசு ரூ.50,000/–<br>இரண்டாம் பரிசு ரூ.30,000/–<br>மூன்றாம் பரிசு ரூ.20,000/– |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**